www.samugasinthanai.in

# அனைத்து ரயில்பெட்டிகளிலும் பயோடாய்லெட்பொருத்தி சாதனைப் படைத்த இன்றைய பாரதபிரதமர்

இந்தியாவில் சுமார் 65000 கிமீ ரயில்பாதைகள், 5600க்கும் அதிகமான ரயில்நிலையங்கள் அருவருக்கத்தக்க முறையில் மாசுபடுத்திய மனிதக்கழிவுகளுக்கு முடிவுகட்டிய ஒரே சிந்தனைவாதி நமது பாரதபிரதமர் தான். (பயோடாய்லெட் நமதுஊர்களில் காணப்படும் சாணவாயு தயாரிக்கும் அமைப்புடன் சிறிது ஒத்துப்போகும்) பயோடாய்லெட் இந்தியாவிலேயே, DRDO + Indian Railways இணைந்து உருவாக்கிய சாதனைப் படைத்த ஒரு இந்திய தயாரிப்பு.

தூய்மை இந்தியா இயக்கத்தின் வெற்றி படிக்கட்டு, கிபி 2021 - 22குள் ரயில் பெட்டிகளில் பொருத்துவதாக இருந்த திட்டத்தை கிபி 2019 லிலே முடிக்க நிர்ணயித்து அதில் வெற்றி கண்டவர். ரயில்வேத்துறையும் மிகமிக முனைப்புடன் செயல் படுத்தியது.

முன்பெல்லாம் ரயில் நிலையங்களில் காத்திருக்கும் பொழுது ரயில் பாதையிலுள்ள மனிதகழிவுகள் பயணிகளை முகம் சுளிக்க வைக்கும். பயோடாய்லெட்கள் பொருத்தியதால் இந்தியமக்கள், ரயில் பயணிகள் மற்றும் இந்திய சமுதாயம் பெற்ற சில நன்மைகள்:

1.ரயில் பயணங்கள் முகம் சுளிக்காமல் இனிதே அமையும்.

2. நிலம், நீர் மற்றும் காற்று மாசுபடுவது இனியில்லை.

3.ஒப்பந்த முறையில் ரயில்நிலைய ரயில்பாதையை சுத்தம் செய்ய இனி கூலியாட்கள் தேவையில்லை.

4.ஜல்லி கற்களால் ரயில்நிலையங்களில் ரயில்பாதையை சுத்தம் செய்வது மிகவும் சவாலாக இருந்தது அந்த நிலை இனி ஏற்படாது .

5.ரயில் நிலைய நடைபாதையுள்ள உணவு பொருட்களை மனமுவந்து உண்ணலாம், தேநீர்அருந்தலாம், அருவருப்பு ஏற்படாது .

6.வெளிநாட்டை சேர்ந்த ரயில் பயணிகளின் மனதில் இந்தியா வின் பெருமை உயரும் .

7.மாசுபட்ட ரயில்பாதையை சுத்தம் செய்ய அதிக அளவில் இனி வேதிப்பொருள்கள் தேவையில்லை .

8.ரயில் நிலையங்கள் சுத்தம் செய்ய ஒப்பந்தம் செய்யமுன்பு போல் அதிக செலவாகாது.

இந்த முயற்சியை மேற்கொண்ட இந்திய ரயில்வே நிறுவனத்தை இந்திய மக்கள் பாராட்டுவார்கள் என்பதில் எந்த ஐயமில்லை.

மேலும் இதை ஒரு சாதனையாக மாற்றிய சாதனையாளர் நமது பாரத பிரதமரை சுற்றுசூழல் சார்ந்த உலகளவிலுள்ள தொண்டு நிறுவனங்கள் பாராட்டும் என்பதிலும்எந்தஐயமில்லை.

ரயில்பாதையை சுத்தம்செய்ய தேவையான நீரின் அளவு மிகவும் குறைந்து விடும் .

சட்டரீதியான மனிதகழிவுகளை மனிதனே அள்ளும் / சுத்தம் செய்யும் குற்றச்சாட்டிற்கு இனி இந்தியன் ரயில்வே ஆளாகாது.

மனிதகழிவுகள் ரயில்பெட்டிகளின் பின்புறம் மற்றும் பக்கத்தகடுகளில் விழுவது முற்றுலுமாக இல்லை. பயோடாய்லெட்டின் மனிதகழிவுகள் பாக்டிரியாவின் தாக்கத்தால், முடிவில் கழிவுகள் மாற்றப்பட்டு வெளியே நீர்துளிகளாக வெளியேற்றப் படுகின்றன.

இந்த சாதனையை அடைய முக்கியமான காரணம் நமதுபிரதமர் நிர்ணயித்த இலக்குத் தான். இல்லையேல் பல வருடங்கள் தேவைப்பட்டிருக்கும் .

www.samugasinthanai.in